
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1173

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

திரைக்கதை வசனம்
## கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

57

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# வீரன் வேலுத்தம்பி; மக்களுக்காகப் போராடிய மாவீரன்!

*1987-ஆம் ஆண்டு, கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி தேனாண்டாள் பிலிம்ஸ் தயாரிக்க, இராம.நாராயணன் இயக்கத்தில் திரைக்கு வந்த திரைப்படம், 'வீரன் வேலுத்தம்பி'.*

*இப்படத்தில் வேலுத்தம்பியாக ராதாரவியும் அவரது ஜோடியாக இன்ஸ்பெக்டர் மலர்விழியாக அம்பிகாவும் வேலுத்தம்பியின் உயிர் நண்பன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரகுமான்கானாக விஜயகாந்த், அவரது மனைவி ஜமீலாவாக விஜி, போலீஸ் ஜீப் டிரைவர் திருமலையாக கார்த்திக், வேலுத்தம்பியின் உதவியாள் செவத்தையாவாக குமரிமுத்து, போலீஸ் ஐ.ஜி.யாக ஏவி.எம். ராஜன் உள்ளிட்ட இன்னும் பலர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.*

*இத்திரைப்படமும் 1987-இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கால அவலங்களையும் அராஜகங்களையும் மக்களிடம் எடுத்துச் சொல்லும் திரைப்படமாக அமைந்துள்ளது.*



*வீரன் வேலுத்தம்பி, இருப்பவரிடம் பறித்து இல்லாதவருக்குக் கொடுப்பவனாக, மக்கள் நலன் காப்பவனாக இருக்கிறான். இதனால், காவல் துறையால் தேடப்படும் குற்றவாளியாக இருப்பதால், தலைமறைவாக வாழ்கிறான்.*




*மந்திரி அரசப்பன் (ஜெய்கணேஷ்), நிலக்கிழார் தாண்டவராயன் (விஜயன்), அவர் மகன் மாடசாமி (தியாகு), இன்ஸ்பெக்டர் இன்பசாகரன், புரோக்கர் பூதலிங்கம் (எஸ்.எஸ்.சந்திரன்) ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து சிலைகளைத் திருடி வெளிநாடுகளுக்குக் கடத்துவதன் மூலம் பணம் சம்பாதிக்கின்றனர். இவர்களுக்கு இடையூறாக வேலுத்தம்பி இருக்கிறான்.*

*ஒருமுறை வேலுத்தம்பியை போலீஸ் துரத்துகிறது. அப்போது, போலீஸ் ஜீப் டிரைவர் திருமலை (கார்த்திக்) வேலுத்தம்பி தப்புவதற்கு உதவுகிறான். அப்போது, திருமலையின் காலில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்துவிடுகிறது. அப்போது, பண்ணையார் தாண்டவராயனும் அவன் மகன் மாடசாமியும் ஓட்டிவரும் சாரட் வண்டியில் திருமலையை ஏற்றிவிட்டு, மருத்துவமனையில் சேர்க்கச் சொல்கிறான் வேலுத்தம்பி. ஆனால், தாண்டவராயனும் மாடசாமியும் திருமலையை இன்ஸ்பெக்டர் இன்பசாகரனிடம் கொண்டு போய் ஒப்படைத்து விடுகின்றனர். இன்பசாகரன் திருமலையைக் கொலை செய்துவிடுகிறான்.*

*இதனை அறியும் வேலுத்தம்பி, பண்ணையார் தாண்டவராயனையும் அவன் மகன் மாடசாமியையும் திட்டமிட்டுக் கொலை செய்கிறான்.*

*வேலுத்தம்பியைத் தேடிவரும் இன்ஸ்பெக்டர் இன்பசாகரன் தலைமையிலான போலீஸ் படை, வேலுத்தம்பி அதிகாரி மலர்விழியிடம் (அம்பிகா) ஒப்படைக்கிறார். மலர்விழி, 'ஜாக்குலின்' என்ற புனைபெயரில் வேலுத்தம்பியைத் தேடி வருகிறார்.*





படங்கள் உதவி : ஞானம்

### வேலுத்தம்பியின் கடந்த காலம்

*வேலுத்தம்பியைச் சந்தித்து, அவனது கடந்தகாலத்தைப் பற்றி கேட்கிறாள். தனது கடந்தகாலத்தை அவளிடம் சொல்கிறான். வேலுத்தம்பியும் இன்ஸ்பெக்டர் ரகுமான் கானும் (விஜயகாந்த்) உயிர்நண்பர்கள். ரகுமான் அவரது மனைவி ஜமீலா (விஜி), அவர்களது மகன் செரீஃப், வேலுத்தம்பியின் தங்கை வேணி ஆகிய அனைவரும் ஒரே வீட்டில் வசிக்கின்றனர்.*

*ரகுமான், அரசப்பன் கும்பலின் தவறுகள்மீது நடவடிக்கை எடுக்கிறான். புரோக்கர் பூதலிங்கத்தைக் கைதுசெய்து சிறையில் அடைக்கிறான். இதனால் மறைவிடத்தைக் காட்டச் சொல்லி ஊர் மக்களை அடித்துத் துன்புறுத்துகின்றது.*

*அவர்களைத் தட்டிக் கேட்கும் மொழிப்போர் வீரரை (மு.க.முத்து) இன்பசாகரன் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்கிறான். அதனை எதிர்த்துக் கேள்வி எழுப்பும் மீனாவை (மாதுரி) போலீஸ் ஜீப்பில் ஏற்றிச்செல்கிறான். மீனாவின் தாய், தன் மகளை விடச் சொல்லி ஜீப்பின் பின்னால் ஓடுகிறாள். ஆனால், ஜீப்பை வேகமாக ஓட்டிச்செல்லும் இன்ஸ்பெக்டர், மந்திரி அரசப்பனிடம் (ஜெய்கணேஷ்) மீனாவை ஒப்படைக்கிறான். அரசப்பன் மீனாவைப் பாலியல் பலாத்காரம் செய்து, ஊருக்கு வெளியே அவளை வீசிச் செல்கின்றான்.*

*அவளைக் காப்பாற்றும் வேலுத்தம்பி, 'நடந்ததை யாரிடமும் சொல்ல வேண்டாம்' என்று கூறி, அவளின் வீட்டுக்கு அழைத்துவந்து, அவளின் தாய் சாரதாவிடம் ஒப்படைக்கிறான். மீனாவின் தங்கை மேகலா (ரேகா) வேலுத்தம்பிக்கு குடிக்க மோர் கொடுக்கிறாள். வீட்டுக்குள் போகும் மீனா, தூக்கு மாட்டி இறந்துபோகிறாள்.*

*இச்சூழலில், போலீஸ் ஐ.ஜி. (ஏவி.எம்.ராஜன்) வேலுத்தம்பியைக் கண்டுபிடிக்கும் பணியை உளவுத்துறை*

> **1987-இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கால அவலங்களையும் அராஜகங்களையும் மக்களிடம் எடுத்துச் சொல்லும் திரைப்படமாக அமைந்துள்ளது.**

*கோபம் கொள்ளும் அரசப்பன், தனது அடியாட்களை ஏவி ரகுமான், ஜமீலா, செரீஃப், வேணி ஆகியோரைக் கொலை செய்கிறான். மேலும், கொலைப் பழியை வேலுத்தம்பி மீது சுமத்திக் கைதும் செய்ய வைக்கிறான். போலீஸிடமிருந்து தப்பும் வேலுத்தம்பி தலைமறைவாக இருந்து, அரசப்பன் கும்பலிடமிருந்து மக்களைக் காப்பதுடன் தீயவர்களைத் தண்டிக்கவும் செய்கிறான்.*

*இந்த உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் மலர்விழி, ஐ.ஜி.யிடம் அதனை எடுத்துச் சொல்கிறாள். ஆனால், வேலுத்தம்பியைக் கைது செய்யாமலும், அவன் இருக்கும் இடத்தைக் காட்டிக்கொடுக்காமலும் விட்ட குற்றத்திற்காக மலர்விழியை ஐ.ஜி. சஸ்பெண்ட் செய்கிறார்.*

*சாரதா அம்மாவின் மகள் மேகலாவை ஆசிரியர் முகிலன் (சந்திரசேகர்) விரும்புவதை அறியும் வேலுத்தம்பி, அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்து, ஊருக்கு அனுப்பி வைக்கிறான். தனியாக வசிக்கும் சாரதா அம்மாள் செத்தால், அவளுக்கு இறுதிச்சடங்கு செய்ய வேலுத்தம்பி வருவான் என்பதை அறியும் அரசப்பன், அடியாட்களை ஏவி சாரதாவைக் கொலை செய்கிறான்.*

*காவல் துறை புடைசூழ சாரதாவின் உடலை மயானத்திற்கு எடுத்துச்செல்கின்றனர். மயானத்திற்கு வேடிக்கை பார்க்க வரும் அரசப்பனை, துப்பாக்கி முனையில் நிறுத்தி, வேலுத்தம்பி, சாரதா உடலுக்குத் தீ மூட்டுகிறான்.*

*இன்ஸ்பெக்டர் வேலுத்தம்பியைத் துப்பாக்கியால் சுடுகிறான். வேலுத்தம்பி அரசப்பனைச் சுட்டுக் கொல்கிறான். வேலுத்தம்பியைக் காப்பாற்ற ஓடி வரும் மலர்விழியை இன்பசாகரன் சுடுகிறான். இன்பசாகரனை வேலுத்தம்பி சுட்டுக் கொல்கிறான்.*

*இறுதியில், வேலுத்தம்பியின் சிதை எரியூட்டப்படுகிறது. தரையில் கிடக்கும் வேலுத்தம்பியின் கால் தண்டையைச் சிறுவன் ஒருவன் எடுத்து, தனது காலில் அணிந்து கொள்வதைக் காட்டுவதன் மூலம் 'போராளிகள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகின்றனர்' என்ற கருத்தை உணர்த்துவதுடன் படம் நிறைவடைகிறது.*

**...காட்சி விரியும்**

---

### திராவிடப் பெருநிலத்தின் வளர்ச்சியை அலசும் நூல்!




சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரக் களம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. திராவிட மாடல் அரசின் சாதனைகள் பட்டிதொட்டியெங்கும் பரவி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கான பேராதரவைப் பெருக்கியுள்ளது. இந்தச் சூழலில், பிரச்சாரத்தில் ஈடுபடுவோருக்காக, "ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்!" என்ற தலைப்பில், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைக் கோத்து, கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் வாயிலாக நூலாக்கித் தந்துள்ளார், முனைவர் காந்தி பாபு.

சமகாலத் தமிழ்நாட்டின் அரசியல், நிர்வாகம் மற்றும் சமூக மாற்றங்களை ஆவணப்படுத்தும் வகையில், கல்வி, மகளிர் மேம்பாடு, தொழில் வளர்ச்சி, விளிம்புநிலை மக்கள் நலன், சமூக நீதி எனப் பல்வேறு கோணங்களில் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளைத் தரவுகளுடனும் கொள்கை விளக்கங்களுடனும் முன்வைத்து, தமிழ்நாடு எப்படி இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவெடுத்துள்ளது என்பதை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளது இந்நூல்.

சாதனைகளின் தொகுப்பாக மட்டுமில்லாமல், மாநில உரிமைகளின் காவல் அரணாக முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எப்படி உயர்ந்து நிற்கிறார், வட மாநிலங்கள் மதக் கலவரங்களுக்கு இரையாகிக்கொண்டிருக்கும் வேளையில், தமிழ்நாட்டை அறிவுசார் சமூகமாகக் கட்டியெழுப்ப எத்தகைய முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது, தொழில் புரட்சி முதல் திசையெங்கும் ஒலிக்கும் திராவிடப் பெருநிலத்தின் வளர்ச்சி முழக்கம் வரை பல்வேறு அம்சங்களை அலசுகிறது இந்நூல்.

அத்துடன் கொள்கைக் கூட்டணி, குலையாமல் பாதுகாத்துவரும் கழகத் தலைவரின் ஆளுமைத் திறனும் 2.0 ஆட்சிக்கான வாக்குறுதிகளும் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களையும் உணரச் செய்கிறது இந்நூல். இறுதிக்கட்டப் பிரச்சாரத்திற்கு இத்தகைய சாதனைத் தொகுப்புகள் அறிவாயுதங்களாகப் பயன்படட்டும்.

நூலைப் பெற 81229-46408 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

---

## ஃப்ளாஷ்பேக்



### இடைத்தேர்தல் பணிகளுக்குப் பின்னர்...



எம்.கே.ராஜா

2012-ஆம் ஆண்டு, பர்கூர் இடைத் தேர்தலின்போது, சென்னையில் இருந்து தேர்தல் பணிக்காகச் சென்றிருந்தோம். தேர்தல் வேலைகளை முடித்துவிட்டு, சென்னை திரும்பியதும் தலைவரைச் சந்தித்து, வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். தலைவரை நேரில் பார்த்தது மறக்க முடியாத நினைவு.

– எம்.கே.ராஜா,
54 (அ) வட்ட முன்னாள் பிரதிநிதி,
துறைமுகம் பகுதி, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

கருவூலம்

### இரட்டைக்குழல் துப்பாக்கி!

1952-ஆம் ஆண்டு, நீறு பூத்துக்கிடந்த இந்தி நெருப்பை, மீண்டும் ஊதிவிட்டது டெல்லி அரசு. ரயில் நிலையங்கள், அஞ்சல் நிலையங்களில் இந்திக்கு முன்னுரிமை கொடுத்து எழுத வேண்டும் என உத்தர விட்டது. அதன் காரணமாக, தமிழ் மூன்றாவதாகக் கீழே எழுதப்பட்டது. இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழிக்கும் போராட்டத்தை அறிவித்தார் பெரியார். 'திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை இந்தி திணிப்புக்கு எதிராக இரட்டைக்குழல் துப்பாக்கி போல வெடிக்கும்' என்றார் பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900